# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | Village: | |
| Preliminary Register | : CC.682/2019 | Age | :53 |
| Sessions | : | Taluk | : |
| Deposition of Witness for | : AW/ PW- 19 | | |
| Name | : செந்தில்குமார், | Religion | : |
| சிறப்பு உதவி ஆய்வாளர் | | | |
| Father's/Husband's Name | : செல்வராஜ் | | |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20.11.2025.**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் குணசேகரன் மற்றும் காவல் ஆய்வாளர் ராஜேந்திரன் ஆகியோரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் கடந்த

28.06.2014 ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் வினோதகன் தனியார் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு விபத்தில் காயமுற்ற ஆனந்தகொடி என்பவர் பேசமுடியாத

நிலையில் சிகிச்சையில் இருந்ததால் அவரது தகப்பனார் செல்வன்துரை என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி காவல் நிலைய குற்ற எண் 92/2014 சட்ட பிரிவுகள் 279, 337 இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். ( **மேற்படி அச்சு முதல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 28.06.2014 ம் தேதி மாலை 6.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்னராஜா மற்றும் காளிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சாட்சிகள் செல்வன்துரை , பெரியசாமி, சுதாகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 01.07.2014 ம் தேதி வழக்கு விபத்தில் காயமுற்ற ஆனந்தகொடி இறந்துவிட்டதாக தகவல் அறிந்து வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அம்மாதுரை என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச விலிருந்து சட்டப் பிரிவுகள் 279, 304 ஏ, இ.த.ச வாக பிரிவு மாற்றம் செய்துள்ளார். பின்னர் 01.07.2014 ம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ஆனந்தகொடி என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். ( **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் இறந்தவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம்

என்பவர் மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்து பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை அவரது உறவினரிடம் ஒப்படைக்க அறிவுறுத்தியுள்ளார். பின்னர் சாட்சிகள் கேசவன், , ரூபன்சாமுவேல், யோவான்பால்ராஜ், விஜயராகவன், ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 11.07.2014 ம் தேதி காலை 12.00 மணியளவில் திருநீலக்குடி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி மாதவன் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். 18/07/2018 ம் தேதி எதிரி சதிஷ்குமார் மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.2811/2018 ல் ஏற்பட்டுள்ள உத்தரவின் படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்து ஏற்படுத்திய TN50S0255 என்ற பதிவெண் கொண்ட Yamaha Crux இருசக்கர வாகனத்தையும், விபத்திற்குள்ளான TN68D8600 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனை சென்று விபத்தில் இறந்துபோன நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயபிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று வந்துள்ளார். பின்னர் 06.03.2015 ம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன ஆனந்தகொடி என்பவருக்கு சிகிச்சை அளித்து அவர் சிகிச்சை பலனின்றி இறந்துபோன விவரத்தை அறிவித்த மருத்துவர் கயல்விழி என்பவரை விசாரித்து மேற்படி நபருக்கான விபத்து பதிவேட்டினை பெற்று வந்துள்ளார், ( **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்டுகிறது**) பின்னர் வழக்கில்

இறந்துபோன ஆனந்தகொடி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தமிழ்மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்துள்ளார். ( **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் அன்றைய தினமே கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று இவ்வழக்கு விபத்து ஏற்படுத்திய TN50S0255 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தாமரை கண்ணன் மற்றும் வழக்கு விபத்திற்குள்ளான TN68D8600 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் பிரபு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி இரண்டு இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வந்துள்ளார். ( **மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ. 8 மற்றும் அ.சா.ஆ.9.ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது சட்ட பிரிவுகள் 279, 304 ஏ, இ.த.ச- வின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரி மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P.Rangeshwari,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**